

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2052 | ஜனவரி 21, 2021 | புரட்சி 20 | முழக்கம் 2 | விலை: ரூ.3.00


## ‘கங்கையும் சாக்கடையும்’

‘பகவான் நாராயணமூர்த்தி மீண்டும் தமிழ்நாட்டுக்கு ‘அவதாரம்’ எடுத்து வந்திருப்பதாக மயிலாப்பூரில், ஸ்ரீரங்கத்தில் வங்கி மேலாளர்கள் சங்கத்தில் கார்ப்பரேட் டைரக்டர்கள் கூட்டத்தில் டி.வி.எஸ். அலுவலகங்களில் பிராமணர் சங்கத்தில் எல்லாம் பலமான பேச்சு அடிபட்டு வந்ததாக கூறுகிறார்கள். எதற்கு ‘அவதாரம்’ எடுத்திருக்கிறார் தெரியுமோ? தமிழ்நாட்டில் திராவிட இயக்கமான தி.மு.க.வை அழித்து, ‘பிராமண’ தேசமாக்க அவதாரம் எடுத்திருக்கிறாராம்.

நாராயணமூர்த்தி - குருமூர்த்தி என்று பெயர் சூட்டிக் கொண்டு வந்திருக்கிறாராம்! அவா, பல தொழில் அதிபர்களுக்கு கார்ப்பரேட்டுகளுக்கு ‘கணக்குப் பிள்ளை’யாக (ஆடிட்டர் என்றும் சொல்வார்கள்) இருந்து ‘சேவை’ செய்த ‘பிராமண’ குல உத்தமராம்!

‘அசுரர்’கள் என்ற திராவிடர்களை அழிக்க ‘அவதாரங்கள்’ - பல்வேறு ‘மேக்-அப்’களோடு போட்டுக் கொண்டு வந்ததாக புராணங்கள் கூறுகின்றன. மீன் வேடம், ஆமை வேடம், பன்றி வேடம், பாதி மிருகம்-பாதி மனிதன் வேடம் என்று பல்வேறு வேடம். இப்போது அவையெல்லாம் எதற்கு? எப்போதுமே வேடம் போடுவதையே தொழிலாளாகக் கொண்ட ஒரு நடிகரையே இழுத்து வந்தால் என்ன என்று ‘இந்திர லோக’மான ‘நாக்பூர்’ ஆலோசனை சபையில் முடிவெடுக்கப்பட்டதாம். அவ்வளவு தான்!

‘ஆகட்டும் குருஜி; அது அடியேனின் பொறுப்பு’ என்று குருஜியிடம் சபதமேற்று களமிறங்கினார், இந்த நவீன ‘அவதாரம்’.

“படையப்பாவே; அருணாசலமே; பாட்சாவே; மனமிறங்கி வா! இந்த தி.மு.க. என்ற மிச்சமிருக்கும் திராவிட அரசியல் கட்சியான அசுர கூட்டத்தை, நீ தான் அழிக்க வேண்டும். இறுதிப் போரை நீயே முடிக்க வேண்டும் என்று மன்றாடினார்; தண்டனிட்டார்; துரத்திக் கொண்டே இருந்தார்; ‘நான் குருஜிக்கு கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற வேண்டும்’; எல்லாம் உன் கையில்தான்” என்று மன்றாடினார்.

‘இந்த வேலைக்கு எனது உடல் ஒத்துழைக்காதப்பா; சினிமா வேடம் போடுவதோடு மட்டும் நிறுத்திக் கொள்கிறேன்; அரசியல் வேடம் சரிப்படாது’ என்று ‘டாட்டா’ காட்டி விட்டார் படையப்பா! இந்த தேவ-அசுரப் போராட்டத்தில் ‘படையப்பா’ மட்டும் அரசியலுக்கு வந்திருந்தால் எப்படி எல்லாம் ‘பூணூல் தேவர்கள்’ பூமியில் ‘ருத்ர தாண்டவம்’ ஆடியிருப்பார்கள் என்று கேட்டார், ஒரு தோழர். எப்படி இருந்திருக்கும்? ‘துக்ளக்’ ஆண்டு விழாவை சர்வதேச விழாவாகக் கொண்டாடியிருப்பார்கள். அமீத் ஷா, முப்படை அணி வகுப்போடு மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டிருப்பார். வேத மந்திர உச்சாடனங்கள், சிறப்பு பூஜைகள் தடபுடலாக நடந்திருக்கும். திராவிட மண்ணை, வேதபுரியாகி விட்டதாகவே கூடிக் கும்மாளமடித்திருப்பார்கள். எல்லா ஆசையிலும் மண்ணை வாரிப் போட்டு விட்டார் படையப்பா.

‘தேவ-அசுரப்’ போர் தொடங்குவதற்கு முன்பே விபீஷணர்களிடம் தோற்றுப் போய் நிற்கிறார்கள் தேவர்கள். இதுவே திராவிடத் தமிழனுக்குக் கிடைத்த முதல் வெற்றி தான்!

அதன் காரணமாக ‘துக்ளக்’ விழாவில் ‘ஈனஸ்வரத்தில்’ பேசியிருக்கிறது ஆடிட்டர் ‘அவதாரம்’. பெங்களூர் சிறையில் ஊழல் வழக்கில் அடைப்பட்டுள்ள ‘சூத்திரப் பெண்’ணை தனது பரம்பரை எதிரியாகக் கருதி வந்த இந்த ‘அவதாரம்’ குரலை மாற்றிப் பேசியிருக்கிறது.

“தி.மு.க.வை எதைச் செய்தாவது ஒழித்தாக வேண்டும்; வெற்றி பெறவிடக் கூடாது; தீயை அவசரமாக அணைக்க வேண்டும்; அதற்கு கங்கை நீரைக் கொண்டு வந்து தான் அணைக்க வேண்டும் என்று காத்திருக்க முடியாது; சாக்கடை நீர் கிடைத்தாலும் பயன்படுத்த வேண்டியதுதான்; அப்படி சசிகலா ஆதரவையும் பெறலாம்” என்று சசிகலாவை சாக்கடையோடு ஒப்பிட்டுப் பேசியிருக்கிறது.

உதாரணமே படு கேவலம். சாக்கடையைவிட கேவலமாகப் போய்விட்டது கங்கை - சாக்கடை நீருக்காகக் காத்திருக்க முடியாது; கங்கை நீர் கிடைத்தாலும் பயன்படுத்த வேண்டியது தான் என்று பேசியிருந்தால் சரியாக இருந்திருக்கும்.

ஆனாலும் ‘தூய்மை’, ‘நேர்மை’, ‘ஊழல்’, ‘தர்மம்’ என்பதற்கெல்லாம் இவாள்தான் விளக்கம் தருவார்கள். அதைத்தான் மக்கள் கண்மூடி ஏற்றுக் கொண்டாக வேண்டும். இல்லாவிட்டால் ‘தேசத் துரோகி’ என்பார்கள். ‘இந்து துவேஷி’ என்று கூக்குரலிடுவார்கள்.

இப்போதாவது கார்ப்பரேட் கணக்குப் பிள்ளை ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும்; இன்றைய ‘திராவிடன்’ வேத காலத்து ஏமாளி அல்ல; இன்றைய ‘தமிழ்நாடு’ வேதகாலத்தை தலைகீழாகப் புரட்டிப் போடத் துடிக்கும் சமூக நீதி மண். இங்கே ‘சம்பூகன்’ சாக மாட்டான்; ‘ராமன்’ தான் தண்டிக்கப்படுவான்.

அவதார சூழ்ச்சிகளை இங்கே மக்கள் புரிந்து வைத்திருக்கிறார்கள். அதனால்தான் படையப்பாவே ‘விபீஷணர்’ வேடம் கட்ட மறுத்து விட்டார்; காலம் மாறிவிட்டது குருமூர்த்தி ‘ஜி’.

**– கோடங்குடி மாரிமுத்து**

# கோவேக்ஸின் தடுப்பூசிக்குத் தயங்குவது ஏன்?

*அரசின் வெளிப்படைத் தன்மை இல்லாமையும் மூன்றாம் கட்ட ஆய்வுகளை முடிக்காமல் அவசர அவசரமாக அனுமதித்ததுமே ‘கொரானா’ தடுப்பூசி போடுவதற்கு மக்கள் தயங்குவதற்கான காரணம்; இது குறித்து பொதுநல மருத்துவர் கு. கணேசன், தமிழ் நாளேடு ஒன்றில் எழுதிய கட்டுரையின் சுருக்கம்.*

உலகெங்கிலும் கரோனா தடுப்பூசிகள் செலுத்தப்படும் பணிகள் தீவிரமடைந்துள்ளன. இந்தியாவிலும் கரோனா தடுப்பூசி செயல் திட்டத்தைப் பிரதமர் நரேந்திர மோடி சென்ற வாரம் தொடங்கிவைத்தார். அதில், சீரம் நிறுவனத்தின் ‘கோவிஷீல்டு’ தடுப்பூசியும், பாரத் பயோடெக் நிறுவனத்தின் ‘கோவேக்ஸின்’ தடுப்பூசியும் அவசரகாலப் பயன்பாட்டுக்கு வந்துள்ளன. கூடவே, இந்தத் தடுப்பூசிகளின் மீதான விவாதங்களும் எழுந்துள்ளன.

இங்கு கவனிக்கப்பட வேண்டிய விஷயம் என்னவென்றால், அந்நிய நாட்டுத் தடுப்பூசிகள் அனைத்தும் முக்கியமான மூன்றாம் கட்ட ஆய்வை முடித்துவிட்டன. அதன் அடிப்படையில் அவசர அனுமதியும் பெற்றுவிட்டன. ஆனால், இந்தியாவில் ‘கோவிஷீல்டு’, ‘கோவேக்ஸின்’ இரண்டு தடுப்பூசிகளுமே மூன்றாம் கட்ட ஆய்வை முடிக்கவில்லை. ஆனாலும் அரசின் அனுமதியைப் பெற்றுவிட்டன. தமிழ்நாட்டில் பிரபலமான மருத்துவமனை ஒன்றின் வைரஸ் நுண்ணுயிரியல் வல்லுநர் ஒருவர் ‘இந்தியாவில் மூன்றாம் கட்ட ஆய்வை முழுவதுமாக முடிக்காத ‘கோவேக்ஸின்’ தடுப்பூசியை நான் செலுத்திக்கொள்ள மாட்டேன்’ என்று பகிரங்கமாகச் சொன்னதும்தான் மூன்றாம் கட்ட ஆய்வின் முக்கியத்துவத்தை மருத்துவ உலகம் கூர்ந்து பார்க்கத் தொடங்கியது.

வழக்கத்தில், முதல் கட்ட ஆய்வில் ஒரு தடுப்பூசியின் பாதுகாப்புத் தன்மையை உறுதி செய்வார்கள். இரண்டாம் கட்ட ஆய்வில் அதற்குத் தடுப்பாற்றலைத் தூண்டும் சக்தி இருக்கிறதா என்பதையும் மூன்றாம் கட்ட ஆய்வில் அதன் செயல் திறனையும் (Efficacy) உறுதிசெய்வார்கள்.

கோவேக்ஸின் மேல் விவாதம் ஏன்?

‘கோவிஷீல்டு’ தடுப்பூசி ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தின் கண்டுபிடிப்பு. இந்தியாவில் சீரம் நிறுவனம் அதைத் தயாரித்துக் கொடுக்கிறது. இது இந்தியாவில் தான் மூன்றாம் கட்ட ஆய்வை முடிக்க வில்லை. பதிலாக, இது பிரிட்டனில் மூன்று கட்ட ஆய்வுகளை முடித்துக் கொண்டது. அதன் செயல்திறன் அங்கு உறுதி செய்யப்பட்டது. அந்தத் தரவுகளை இந்தியாவிலும் ஏற்றுக்கொண்டதால், ‘கோவிஷீல்டு’ தடுப்பூசி குறித்து விவாதம் எழவில்லை. மாறாக, ‘கோவேக்ஸின்’தான் விவாதப்பொருள்.

அதாவது, ஆய்வில் செயல்திறன் உறுதி செய்யப்பட்ட ‘கோவிஷீல்டு’ தடுப்பூசியையும் செயல்திறன் உறுதிசெய்யப்படாத ‘கோவேக்ஸின்’ தடுப்பூசியையும் சம அளவில் பார்ப்பது எந்த வகையில் நியாயம் என்பதுதான் முக்கிய விவாதம். சமமாக இல்லாத தடுப்பூசிகளை ஒரே நேரத்தில் பயன்படுத்தும்போது பயனாளி விரும்புவதைத் தேர்வுசெய்யும் உரிமையைப் பறித்துக்கொள்வது எப்படி நியாயமாகும் என்பது அடுத்த விவாதத்துக்கான கேள்வி. கரோனா பெருந்தொற்றின் முன்களப் பணியாளர்களுக்கு முன்னுரிமை கொடுத்துத் தடுப்பூசி வழங்கப்படும் இந்தத் திட்டத்தில், ஆய்வு அடிப்படையில் செலுத்தப்படும் ‘கோவேக்ஸின்’ தடுப்பூசிக்கு அவர்களைப் ‘பரிசோதனை எலி’களாக நடத்துவது முறையா என்பது இந்த விவாதத்தின் நீட்சி.

‘கோவேக்ஸின்’ தடுப்பூசிக்கு வல்லுநர்களின் பரிந்துரைப்படிதான் அவசரகால அனுமதி அளித்தது என்று ஒன்றிய அரசு விளக்கம் சொன்னாலும், எவருக்கும் இயல்பாக எழும் கேள்விகள் இவை: ஒருவேளை ‘கோவேக்ஸின்’ தடுப்பூசியின் மூன்றாம் கட்ட ஆய்வில் அதன் செயல்திறன் குறைவாக இருப்பது தெரியவந்தால், ஏற்கெனவே அந்தத் தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களுக்குச் செயல்திறன் அதிகமுள்ள வேறு ஒரு தடுப்பூசியை மறுபடியும் செலுத்துவார்களா? அப்படி நிகழுமானால், அது நாட்டுக்கு இரட்டிப்புச் செலவு ஆகுமே அரசால் சமாளிக்க முடியுமா? அடுத்து வரும் புதிய மருத்துவக் கண்டுபிடிப்புகளுக்கு இது மோசமான முன்னுதாரணம் ஆகிவிடாதா?


இந்த இரண்டு தடுப்பூசிகளுக்கு அவசரகால அனுமதி வழங்குவதில் வெளிப்படைத் தன்மை இல்லாமல் நடந்துகொண்டதில் தொடங்கி, அவற்றைச் செயலுக்குக் கொண்டுவந்ததுவரை ஒன்றிய அரசின் அவசரகதியிலான ஏற்பாடுகள் மருத்துவ வல்லுநர்களுக்கே தடுப்பூசியின் மேல் நம்பிக்கை இழக்கச் செய்யும்போது, கரோனா பெருந்தொற்றிலிருந்து பெரிதும் காப்பாற்றப்பட வேண்டிய பொதுமக்களும் நம்பிக்கை இழந்துள்ளதில் வியப்பில்லை. தமிழகத்தில் ஆயிரம் பேருக்கு மேல் செலுத்தப்பட வேண்டும் என்ற நோக்குடன் தடுப்பூசித் திட்டம் தொடங்கப்பட்ட முதல் நாளில் 99 பேர் மட்டுமே ‘கோவேக்ஸின்’ தடுப்பூசியைச் செலுத்திக் கொண்டனர் எனும் புள்ளிவிவரம், இந்தத் தடுப்பூசித் தயக்கத்துக்கான தொடக்கப்புள்ளி என்கின்றனர் மருத்துவர்கள்.

தடுப்பூசிக்கு எதிரான பிரச்சாரங்கள் உலகம் முழுவதிலும் தீவிரமடையும் இந்த நேரத்தில், தடுப்பூசி செலுத்திக்கொள்வதற்கே பொது வெளியில் தயக்கங்கள் ஏற்படுமானால், உலகமே வியக்கும்படியான மிகப் பிரம்மாண்டமான தேசிய கரோனா தடுப்பூசித் திட்டம் தன் இலக்கை அடைவது தடைபடும். ஆகவே, ‘கோவேக்ஸின் வேண்டாம்’ என நிராகரிப்பவர்களுக்கு அவர்கள் விரும்பும் ‘கோவிஷீல்டு’ தடுப்பூசியை வழங்க முன்வருவதாலும், ஆய்வு நோக்கில் ‘கோவேக்ஸி’னை ஏற்றுக்கொள்ள முன்வருபவர்களுக்குத் தனியாகத் தடுப்பூசிக் களங்களை ஏற்படுத்துவதாலும் இந்தத் தயக்கங்கள் விலக்கப்படலாம்.

மேலும், ‘மக்கள் அச்சப்பட வேண்டாம்’ என்ற வாய்மொழி வார்த்தைகளைவிட, அமெரிக்கா, பிரிட்டன், சிங்கப்பூரில் முக்கியத் தலைவர்கள் பலரும் பொதுமக்கள் முன்னிலையில் தடுப்பூசி செலுத்திக்கொண்டதைப் போல், தமிழகச் சுகாதாரத் துறை செயலர் ஜெ.ராதாகிருஷ்ணன் தடுப்பூசி செலுத்திக்கொண்டதைப் போல நம் தலைவர்களும் தடுப்பூசிப் பரிந்துரைக் குழுவினரும் ‘கோவேக்ஸின்’ தடுப்பூசியைப் போட்டுக்கொள்ள முன்வந்தால், மக்களுக்கு அதன் மேல் நம்பிக்கை பிறக்கும். அதுவே இந்தத் தடுப்பூசித் திட்டத்துக்கு நல்லதொரு தொடக்கமாகவும் இருக்கும். செய்வார்களா?

# கழகம் முன்னெடுத்த பொங்கல் விழாக்கள்

**திருவல்லிக்கேணி :** திராவிடர் விடுதலைக் கழகம் திருவல்லிக்கேணி பகுதி சார்பில் 21ஆம் ஆண்டு பொங்கல் விழா மற்றும் தமிழர் திருநாள் 13.01.2021 அன்று மாலை 6 மணியளவில் வி.எம். சாலை, பெரியார் படிப்பகம், பத்ரிநாராயணன் நூலகம் வாயிலில் எழுச்சியுடன் நடைபெற்றது.



பறையிசையுடன் தொடங்கியது. சமரன் கலைக் குழுவின் பறையிசை, சிலம்பாட்டம், ஒயிலாட்டம், கரகாட்டம், கிராமியப் பாடல்கள் ஆகிய கலை நிகழ்ச்சிகள் 3 மணி நேரம் நிகழ்ந்தன.

நிகழ்வில், கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் கலந்து கொண்டு, தமிழர் திருநாள், பொங்கல் தினம் குறித்து உரையாற்றினார். தலைமைக்குழு உறுப்பினர் அய்யனார், அன்பு தனசேகர், தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், மாவட்டத் தலைவர் வேழவேந்தன், திமுக தெற்கு மாவட்ட துணைச் செயலாளர் ஆர்.என்.துரை, திருவல்லிக்கேணி பகுதி அவைத் தலைவர் கா.வே. செழியன் ஆகியோரும் கலந்து கொண்டனர். மாவட்ட செயலாளர் உமாபதி நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார்.

கொரோனா காலத்திலும் நிகழ்விற்கு, நிதியுதவி வழங்கி ஊக்கப்படுத்திய பகுதி மக்கள் மற்றும் நன்கொடையாளர்களுக்கு, திருவல்லிக்கேணி பகுதி தோழர்கள் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

**மயிலாப்பூர் :** மயிலை பகுதி திராவிடர் விடுதலைக் கழகம் 5 ஆம் ஆண்டு பொங்கல் விழா



(4ஆம் பக்கம்)

தலையங்கம்

## தமிழ்ப் புத்தாண்டை ஏற்க மறுக்கும் குழப்பவாதிகள்

தி.மு.க. ஆட்சியில் கலைஞர் செய்த மகத்தான பண்பாட்டுப் புரட்சியாகக் குறிப்பிட வேண்டும் என்றால் அது தை முதல் தேதியே தமிழ்ப் புத்தாண்டு என்று அறிவித்ததுதான். இதனால் திருவள்ளுவர் ஆண்டு தமிழ் ஆண்டுக்கணக்காக மாற்றப்பட்டது. ஒரு வார காலம் இந்தத் தமிழ்ப் புத்தாண்டை அரசு அலுவலகங்களில் விழாவாகக் கொண்டாட அரசாணை பிறப்பித்தார். ஜெயலலிதா முதல்வரான பிறகு இதை அகற்றி மீண்டும் சித்திரை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு என்று அறிவித்து, 'சமஸ்கிருதப் பண்பாட்டுக்கு' உயிர் கொடுத்தார். இந்த நிலையில் தை முதல் நாளை தமிழ்ப் புத்தாண்டாக ஏற்க முடியாது என்று இந்துத்துவம் பேசுவோர் கூறுகிறார்கள்.

பா.ஜ.க. அண்மையில் கொண்டாடிய பொங்கல் விழாவில்கூட 'தமிழ்ப் புத்தாண்டை' கொண்டாடவில்லை. பா.ஜ.க.வைச் சார்ந்த எச்.ராஜா, தனது பொங்கல் வாழ்த்துச் செய்தியில், "உலகம் முழுதும் வாழும் இந்துக்களுக்கு மகா ஷங்கராந்தியில் உத்ராயண வாழ்த்து" என்று குறிப்பிட்டிருந்தார். இதே குரலில் காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான கார்த்தி சிதம்பரம், "தை மாதம் முதல் தேதியை தமிழ்ப் புத்தாண்டாக ஏற்க முடியாது. பருவகால அடிப்படையில் பார்த்தால் சித்திரையில் தமிழ்ப் புத்தாண்டு தொடங்குகிறது. இதற்காக எந்த விவாதத்துக்கும் தயார்" என்று சிவகங்கை மாவட்டத்தில் நடந்த ஒரு விழாவில் பேசியிருக்கிறார். இது சரியான கருத்து அல்ல; இது குறித்த சில வரலாறு மற்றும் பண்பாட்டு செய்திகளை மீண்டும் நினைவுகூர வேண்டியிருக்கிறது.

பழந்தமிழர்கள் தங்களது அறிவுக்கு உகந்தவாறு காலங்களைக் கணித்தார்கள். மழை, வெயில், குளிர், பனி, தென்றல், வாடை இவை மாறி மாறிப் பருவ காலங்களில் இயற்கை மனிதனை ஆண்டு வந்ததால் தமிழர்கள் ஒரு வருடத்தை 'ஆண்டு' என்று குறிப்பிட்டனர். அவ்வாறே தன்னை ஆள்பவனையும், வணங்கும் கடவுளையும் ஆண்டவன் என்று குறிப்பிட்டனர். ஒரு ஆண்டை தமிழன் ஆறு பருவ காலமாகப் பிரித்தான். இளவேனில் (தை மாசி), முதுவேனில் (பங்குனி, சித்திரை), கார் (வைகாசி, ஆனி), கூதிர் (ஆடி, ஆவணி), முன்பனி (புரட்டாசி, அய்ப்பசி), பின் பனி (கார்த்திகை மார்கழி). தமிழன் தன் வாழ்வை இளவேனிற் காலத்தில் தொடங்கினான். இதையே ஆண்டின் துவக்கமாகக் கொண்டான். எனவே தை மாத முதல் நாளே ஆண்டின் துவக்கமாகக் கொண்டான். இவை தை முதல் நாளே தமிழர்களுக்கான புத்தாண்டு என்பதற்கான வாழ்வியல் காரணங்கள்.

தமிழர்களின் காலக் கணக்கீட்டைக் கொண்டும், இந்தக் கருத்தை நியாயப்படுத்த முடியும். காலக் கணக்கீட்டிற்கு அடிப்படையாக இருப்பது சூரியன்தான். பகல், இரவு, நாள், கிழமை, பருவம், ஆண்டு எல்லாமே சூரியன் இயக்கத்தை அடிப்படையாகக் கொண்டே கணக்கிடப்படுகின்றன. சூரியனைச் சுற்றி பூமியும், மற்ற கோள்களும் சுற்றினாலும், பூமியில் உள்ளவர்கள் பார்வையில் சூரியன் காலையில் எழுகிறது. மாலையில் மறைகிறது. சந்திரன் தேய்கிறது, வளர்கிறது. நட்சத்திரங்களின் இருப்பிடங்கள், கோள்களின் நிலைகள்... மனிதர்களின் பார்வையில் மாறுகின்றன. இந்தப் பார்வையில் தெற்கே சென்ற சூரியன், வடக்கு நோக்கித் திரும்புகிற நாள் தை முதல் நாளாக, புத்தாண்டின் துவக்கமாகத் தமிழர்களால் ஏந்தப்பட்டது. சூரியன் வடக்கு நோக்கித் திரும்புவது தான் தமிழர்கள் வாழும் பகுதியில் நிகழ்வதால் தமிழர்கள், தங்களின் வானியல் கணிதப்படி அதுவும் தை மாதத்தில் நிகழ்வதால் தமிழ் மக்கள் தை முதல் நாளை தமிழர் புத்தாண்டாக ஏற்றுக் கொண்டிருந்தனர்.

தமிழர்கள் வகுத்துக் கொண்ட வானியல் கணிப்பின்படி, தை முதல் நாளே தமிழ் புத்தாண்டாக இருந்திருக்கிறது. ஆனால் அறிவியல் கண்ணோட்டத்தில் சூரியன் உதயமாவதும் இல்லை, மறைவதும் இல்லை. அது என்றும் ஒளிர்கிறது. பூமி, தற்சுழற்சியாக சூரியனை சுற்றி வரும்போது 24 மணி நேரத்தில் சூரிய ஒளிபடுகிற இடமெல்லாம் பகலாகவும், மறுபகுதி இரவாகவும் அமைகிறது.

தமிழர் கொண்டாடியதை புத்தாண்டு, சித்திரைக்கு மாறியது எப்படி? குப்தர் வம்சத்தில் வந்த இரண்டாம் சந்திர குப்தன் தனது பெயரை விக்கிரமாதித்தன் என்று மாற்றிக் கொண்டு – தனது பெயரால் 'விக்கிரம சகம்' என்ற ஆண்டு முறையை உருவாக்கிக் கொண்டான். வானவியலை அறிவியல் கண்ணோட்டத்தில் ஆராய்ந்த ஆரியபட்டருக்கு எதிராக வானவியலில் – சாதகம், சோதிடத்தைப் புகுத்தும் முயற்சிகள் அவனது காலத்தில் மேற்கொள்ளப்பட்டன. எனவே வானியல் சிந்தனையாளர் ஆரியபட்டர் புறக்கணிக்கப்பட்டு, பழமையில் ஊறியவரான மிகிரர் உயர்த்திப் பிடிக்கப்பட்டார். அப்படி விக்கிரமாதித்தன் உருவாக்கிய 'விக்கிரமசகம்' எனும் ஆண்டு முறையில் சித்திரை முதல் நாளே ஆண்டின் முதல் நாளாக்கப்பட்டது. 'விக்கிரம சகம்' 60 ஆண்டுகளை வரையறுத்தது. 'பிரபவ' ஆண்டில் தொடங்கி 'அட்சய' ஆண்டில் முடியும். இவைகளில் ஒரு பெயர்கூட தமிழ் இல்லை. 60 ஆண்டுகளுக்கும் வடமொழிப் பெயர்கள்தான். ஆனால், தமிழர்கள் தமிழ்ப் புத்தாண்டாக கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் வேடிக்கை – வேதனை.

இந்த 60 ஆண்டுகளையும் கடவுளோடு தொடர்புபடுத்தி, ஆபாசம் வழியும் கதைகளையும் உருவாக்கி விட்டார்கள். நாரதரும், கிருஷ்ணனும் உறவு கொண்டு (இருவரும் ஆண்கள்) பெற்ற குழந்தைகளே 'பிரபவ முதல் அட்சய முடிய 60 ஆண்டுகள்' என்று தமிழ்க் கலை களஞ்சியமான 'அபிதான சிந்தாமணி' கூறுகிறது. இதற்கு புராண ஆதாரங்கள் வேறு உள்ளன. இந்த 60 ஆண்டுகளுக்கு மேல் 61வது ஆண்டைக் குறிக்கப் பெயர் இல்லை. மீண்டும் 'பிரபவத்திலிருந்து தான் தொடங்க வேண்டும்' நடைமுறைக்கும் அறிவுக்கும் ஒவ்வாத குழப்பங்களும், மூடநம்பிக்கைகளும் இதில் அடங்கிக் கிடக்கின்றன.

இந்த நிலையில் தான் – தமிழ் அறிஞர்கள் 1921-ம் ஆண்டு சென்னை பச்சையப்பன் கல்லூரியில் கூடி ஆராய்ந்தார்கள். மூன்று முக்கிய முடிவுகளை அவர்கள் அப்போது எடுத்தார்கள்.

1. திருவள்ளுவர் பெயரில் தொடர் ஆண்டாகப் பின்பற்றுவது.
2. அதையே தமிழ் ஆண்டு எனக் கொள்வது.
3. திருவள்ளுவர் காலம் கி.மு. 31 (வழக்கில் உள்ள ஆங்கில ஆண்டுடன் 31-ஐக் கூட்டினால் திருவள்ளுவர் ஆண்டு)

திருவள்ளுவர் ஆண்டுக்கு முதல் மாதம் தை இறுதி மாதம் மார்கழி. புத்தாண்டுத் தொடக்கம் தை முதல் நாள். கிழமைகள் வழக்கில் உள்ளவை என்று முடிவெடுத்தார்கள். இப்படி முடிவெடுத்தவர்கள் தமிழகத்தின் மூத்த தமிழ் அறிஞர்கள் மறைமலை அடிகள், திரு.வி.க., சுப்பிரமணியப் பிள்ளை, சச்சிதானந்தப் பிள்ளை, ந.மு. வேங்கடசாமி நாட்டார், நாவலர் சோம. சுந்தர பாரதியார், கி.ஆ.பெ. விசுவ நாதம் ஆகியோர் ஆவர்.

அதன் பிறகு 1939 ஆம் ஆண்டு திருச்சியில் 'அகில இந்திய தமிழர் மாநாடு' சோமசுந்தர பாரதியார் தலைமையில் கூடியது. அதில் பெரியார், கரந்தை தமிழ்ச் சங்கத் தலைவர் உமா மகேசுவரனார், பேராசிரியர் கா. சுப்பிரமணியம், தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், திரு.வி.க., மறைமலையடிகளார், பி.டி.இராஜன், ஆற்காடு இராமசாமி முதலியார், புரட்சி கவிஞர் பாரதிதாசன், பட்டுக்கோட்டை அழகிரி உட்படப் பலரும் பங்கேற்றனர். அந்த மாநாடும் தை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு என்றும், பொங்கல் திருநாளே தமிழர் திருநாள் என்றும் பறைசாற்றியது.

1971-ல் அன்றைய கலைஞர் ஆட்சி, திருவள்ளுவர் ஆண்டு முறையை ஏற்றது. இம்முறையையோ 1971 முதல் அரசு நாட்குறிப்பிலும், 1972 முதல் அரசிதழிலும், 1981 முதல் அரசின் அனைத்து அலுவல்களிலும் பின்பற்றி வருகிறது. 1969ஆம் ஆண்டு கலைஞர் ஆட்சி பொங்கல் திருநாளுக்கு அடுத்த நாளை திருவள்ளுவர் நாள் என்று ஏற்று அரசு விடுமுறை அளித்து ஆணை பிறப்பித்தது. எனவே தை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு ஆகும். இடையில் வந்து புகுந்த சித்திரை – தமிழர் மீது புகுத்தப்பட்ட பண்பாட்டுத் திணிப்பாகும்.

## வேளாண் சட்டம்: உச்சநீதிமன்றம் நியமித்த குழுவின் பின்னணி என்ன?

நீதிமன்றம் வேளாண் சட்டங்கள் குறித்து தமக்கு ஆலோசனை வழங்க ஒரு குழு போட்டுள்ளது. இந்த குழுவிடம் விவசாயிகள் தமது கருத்துகளை கூற வேண்டும் என்பதை கிட்டத்தட்ட ஒரு ஆணையாக நீதிமன்றம் முன்வைத்துள்ளது. இந்த குழு அமைக்கப்பட்டதில்தான் நீதிமன்றத்தின் உண்மையான நோக்கம் என்ன என்பது குறித்து பலத்தசந்தேகம் எழுந்துள்ளது. பேச்சு வார்த்தைகளில் அரசு தரப்பிலும் குழுவை அமைக்கும் ஆலோசனையை முன் வைத்தது. சட்டங்களை அகற்றாமல் எந்த குழுவையும் தாங்கள் ஏற்க இயலாது என தொடர்ந்து விவசாயிகள் கூறிவருகின்றனர். இந்த குழுவின் தலைமைப் பொறுப்புக்கு நீதிபதி லோதாவை நியமிக்கலாம் என 11.01.2021 அன்று துஷ்யந்த் தவே முன்மொழிந்தார். சில நாட்களுக்கு முன்பு இதே ஆலோசனையை முன்வைத்த நீதிமன்றம், கிராமப்புற பிரச்சனைகள் பற்றி ஆழமாக ஆய்வு செய்யும் பிரபல பத்திரிக்கை யாளர் சாய்நாத் போன்றோரை இந்தகுழுவில் இணைக்கலாம் என்று கூட கருத்து தெரிவித்தது. ஆனால் இப்பொழுது அறிவிக்கப்பட்ட குழு உறுப்பினர்களின் பெயர்கள் இமாலய அதிர்ச்சியை உருவாக்கி யுள்ளது எனில் மிகை அல்ல!

**அஷோக் குலாட்டி :** இவர் ஒரு விவசாய பொருளாதார அறிஞர். நிதி ஆயோக் உறுப்பினரான இவர்தான் இந்த சட்டங்களின் பிதாமகர் என கூறப்படுகிறது. 1990ஆம் ஆண்டிலிருந்து நவீன தாராளமய பொருளாதார கொள்கைகளை ஆதரிக்கும் இவர் இந்த சட்டங்களை ஆதரித்து பத்திரிகைகளில் தொடர்ந்து எழுதிவருகிறார். எதிர்கட்சிகள் இந்த சட்டங்கள் குறித்து தவறாக பேசி வருகின்றனர் எனவும் அவர் குற்றம்சாட்டுகிறார்.

**பிரமோத் குமார் ஜோஷி :** சர்வதேச உணவுக் கொள்கை ஆராய்ச்சி நிறுவனத்தின் தெற்கு ஆசிய இயக்குநரான இவர் குறைந்த பட்ச ஆதார விலை என்பதே (MSP) இருக்கக் கூடாது எனவும் விவசாயிகளின் இந்த கோரிக்கையை எக்காரணம் கொண்டு ஏற்கக்கூடாது எனவும் வாதிடுபவர். வேளாண் சட்டங்களை ஆதரித்து பல கட்டுரைகளை எழுதி வருகிறார். வேளாண் சட்டங்களில் இம்மியளவும் மாற்றம் செய்யக்கூடாது எனவும் அப்படி மாற்றினால் இந்தியா உலக பொருளாதார வல்லரசாக மாறுவது தடைப்பட்டுவிடும் என அங்கலாய்க்கும் பிரகஸ்பதி இவர்!

**அனில் கன்வாட் :** இவர் 'ஷேக்தாரி சங்கதான்' எனும் விவசாய அமைப்பின் தலைவர். வேளாண் சட்டங்களை திரும்ப பெறக்கூடாது எனவும் அவற்றில் சில சிறிய மாற்றங்கள் செய்தால்போதுமானது எனவும் கூறுகிறார். சமீபத்தில் விவசாய அமைச்சர் தோமர் அவர்களை சந்தித்து எழுத்து மூலமாக தனது ஆதரவை தெரிவித்தார். பல ஆண்டு களாகவே ஷேக்தாரி சங்கதான் விவசாய சந்தையை கார்ப்பரேட்டு களுக்கு திறந்துவிட வேண்டும் என கோரி வருகிறது. இந்த சட்டங்களை அரசாங்கம் நிறைவேற்றிய பொழுது பட்டாசுகள் வெடித்து வரவேற்றவர் இவர்!


**ஜித்தேந்தர் சிங் மான் :** பாரதிய கிசான் யூனியனின் ஒரு பிரிவு தலைவர். (இந்த அமைப்பின் பல பிரிவுகள் போராட்டக் களத்தில் உள்ளன) இவரும் அமைச்சரை சந்தித்து எழுத்து மூலமாக ஆதரவு அளித்துள்ளார். பஞ்சாப் மக்களின் கடும் கோபத்துக்கு உள்ளானவர் எனில் மிகை அல்ல! (இவர் இப்போது பதவியிலிருந்து விலகி விட்டார்) வேளாண் சட்டங்களை மட்டுமல்ல; கார்ப்பரேட்டுகளின் நலன்களை வலுவாக ஆதரிக்கும் இத்தகைய 'அறிவாளிகள்' தான் உச்சநீதிமன்றம் அமைத்துள்ள குழுவின் உறுப்பினர்கள். இந்த குழுவை எதன் அடிப்படையில் நீதிமன்றம் நியமித்தது? இத்தகைய ஒரு குழுவிடம் எப்படி விவசாயிகள் தமது கருத்தை கூற இயலும்? இந்த குழுவின்தலைமைப் பொறுப்புக்கு நீதிபதி லோதாவை நியமிக்கலாம் எனும் துஷ்யந்த் தவே முன்மொழிவு ஏன் ஏற்கப்படவில்லை? உச்சநீதிமன்றம் தானே முன்வைத்த பத்திரிகையாளர் சாய்நாத் ஏன் இந்த குழுவில் இல்லை? இந்த குழுவின் ஆலோசனைகள் என்ன ஆகும்? உச்சநீதிமன்றம் இந்த ஆலோசனைகளை அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என கூற அதிகாரம் உள்ளதா? இப்படி பல கேள்விகள் விடை தெரியாத புதிர்களாக உள்ளன. இத்தகைய ஒரு குழுவிடம் தமது கருத்துகளை கூறுவதால் எந்தபயனும் இல்லை எனும் விவசாயிகளின் நிலைபாடு முற்றிலும் நியாயமானதே!

உச்சநீதிமன்றம் தனது ஆணையின் ஒரு இடத்தில் "போராட்டக் களத்தில் வைக்கப்பட்டுள்ள பெண்கள்/முதியோர்/குழந்தைகள் ஆகியோர் உடனடியாக திருப்பி அனுப்பப்பட வேண்டும்" என கூறுகிறது. "Kept" எனும் ஆங்கிலவார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. இது விமர்சனங்களை விளைவித்துள்ளது. அப்படியானால் அவர்களின் விருப்பத்துக்கு மாறாக இருத்தி வைக்கப்பட்டுள்ளனர் என நீதிமன்றம் கருதுகிறதா? இது முற்றிலும் பொய் என கூறுகின்றனர் விவசாயிகள். விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்களில் குறிப்பாக விவசாய தொழிலாளர்களில் 70% பேர் பெண்கள்தான்! இந்த சட்டங்கள் பெண்களையும் முற்றிலுமாக பாதிக்கிறது. எனவேதான் அவர்கள் போராட்டத்தில் பங்கேற்றுள்ளனர். பல பெண்கள் தாமாகவே டிராக்டர்களை ஓட்டி வந்துள்ளனர் என்பது அனைவரும் கண்டஉண்மை! நீதிமன்றம் தனது வார்த்தைகளை மிகவும்கவனமாக பயன்படுத்த வேண்டும் என்பது விவசாயிகளின் கோரிக்கை ஆகும்.

வேளாண் சட்டங்களின் அமலாக்கத்துக்கு இடைக்காலத்தடை என்பது மிக அசாதாரணமான ஒன்று எனவும் இதனை கருத்தில் கொண்டு விவசாயிகள் வீடு திரும்ப வேண்டும் எனவும் உச்சநீதிமன்றம் கூறியுள்ளது. இது ஆணை அல்ல; ஆனால் எதிர்பார்ப்பு என நீதிமன்றம் கூறுகிறது. போராடுவதற்கான உரிமையை கேள்வி கேட்காத உச்ச நீதிமன்றத்தின் நிலைப்பாடுக்கு நன்றி தெரிவித்துள்ள விவசாயிகள், சட்டங்கள் முழுமையாக திரும்பப் பெறாமல் தாங்கள் வீடு திரும்பப்

(4ஆம் பக்கம்)

### தேவர்கள் அய்ந்து கண்டங்களில் இல்லாதது ஏன்?



இராட்சதர்கள் தபசு செய்தார்கள்; வரம் பெற்றார்கள்; அந்த வரத்தைக் கொண்டு அக்கிரமம் செய்தார்கள் – என்பதெல்லாம் இந்நாட்டுப் பழங்குடி மக்களையும், அவர்கள் தலைவர்களையும் இராட்சதர்கள் என்று சொல்லிக் கொல்லுவதற்கு கடவுள்களும், தேவர்களும் என்ற பெயர் கொண்ட ஆரியர்கள் வழிதேடிக் கொண்ட ஒரு சாக்கே அல்லாமல், அவர்கள் வரம் ஏதும் பயன்பட்டதாகத் தெரியவில்லை.

விஷ்ணு, சிவன் ஆகியவர்கள் யாவர்? எப்போது உண்டா னார்கள் ? எப்படி உண்டானார்கள் ? எங்கிருந்து வந்தார்கள்? ஏன் வந்தார்கள் ? என்பதற்கு ஒரு ஆதாரமும் கிடையாது.

அதுபோலவே, தேவர்கள் யார் ? எப்படி உண்டானார்கள்? எங்கிருந்து வந்தார்கள் ? ஏன் வந்தார்கள் ? உலகிற்கு அவர்களால் என்ன பயன் என்பதற்கு ஆதாரமும் கிடையாது.

இவர்கள் எல்லாம் இமயமலைக்கு இப்புறம்தான் அதாவது, 'இந்தியக் கண்டம்' என்னும் பிரதேசத்தில் இருந்தார்களே ஒழிய, மற்றபடி இந்தியாவிற்கு அப்பாற்பட்ட மற்ற அய்ந்து கண்டங் களிலும் இருந்ததாகவோ, அந்தக் கண்டங்களைப் பற்றி ஏதாவது தெரிந்திருந்ததாகவோ சரியான தகவல்களைக் காணோம்.

**குடிஅரசு – 20.09.1947**

## ‘வர்ணாஸ்ரம்’ என்ற பாகுபாட்டை ஆதரித்தார்

# சாவர்க்கர் கூறும் இந்துத்துவம் எது?

***‘ஆனந்த விகடன்’ வார ஏடு, 2019, டிசம்பர் 18 இதழில் சாவர்க்கர் பற்றிய கட்டுரை இது.***

அமித் ஷாவின் ‘சாவர்க்கர் பாசம்’ அகிலம் அறிந்த ஒன்று. அவரது வீட்டில் நிரந்தரமாகவே ஒரு சாவர்க்கர் வரைபடம் உண்டு. எப்போதும், அதன் முன்னால் அமர்ந்தபடிதான், போட்டோவுக்கு போஸே கொடுப்பார் மனிதர்.

ஆக, விஷயம் தெளிவாகிறது. சாவர்க்கரை அதிகாரபூர்வமாக அங்கீகரிப்பதற்கான வேலைகள் வேகமெடுத்துவிட்டன.

ஏற்கெனவே, ‘ரூபாய் நோட்டில் சாவர்க்கர் படத்தைப் பொறிக்க வேண்டும்’ என்ற கோரிக்கை வேறு நிறைய ஆண்டுகளாக நிலுவையில் இருக்கிறது.

அதுவும் இனி மேலெழுந்து வரக்கூடும். இதன் ஆபத்தை நாம் எந்தளவுக்கு உணர்ந்திருக்கிறோம் என்று தெரியவில்லை. ஏனென்றால், சாவர்க்கருக்கு அளிக்கப்படும் அங்கீகாரம் என்பது, வெறுமனே அவருக்கான அங்கீகாரம் மட்டுமல்ல. அது, அவரது கோட்பாட்டுக்கு அளிக்கப்படும் அங்கீகாரமும்கூட.

இந்த நேரத்தில், சாவர்க்கர் யார், அவரது அரசியல் எப்படிப்பட்டது, அவர் பாடுபட்டது யாருக்காக என்பதையெல்லாம், விரிவாகப் பேச வேண்டியது அதி அவசியமாகிறது.

இல்லையென்றால், நாளைக்கு ரூபாய் நோட்டில் காந்திக்குப் பதில் சாவர்க்கர் சிரிப்பதை, வரும் தலைமுறைப் பிள்ளைகள் பார்க்க நேரிடும். அமித் ஷா வேறு ‘வரலாற்றை மாற்றி எழுதுவோம்’ என்று பீதி கிளப்பிக் கொண்டிருக்கிறார். ஆகவே, இப்போது பேசுவது தான் சரி!

சாவர்க்கர் ஒரு சிந்தனைவாதி என்பதில் எவரும் சந்தேகம் கொள்ள வேண்டியதில்லை. அவர் சிந்தனைவாதிதான்! ஆனால், அவரது சிந்தனைகள் எதை நோக்கி இருந்தன என்பது தான் முக்கியமானது. அதையே அதிகம் கவனத்தில் எடுத்து விவாதிக்க வேண்டும். அவரது சிந்தனை என்ன. இந்து ராஷ்டிரம் தான்! அந்த இந்து ராஷ்டிரம் எப்படியிருக்கும் அவரே அதை விவரிக்கிறார்... ‘எவரெல்லாம் இந்து மதத்தைச் சார்ந்தவர்கள் இல்லையோ, அவர்களெல்லாம் இந்தியர்களும் அல்ல’.

ஒரு தேசியத்துக்கு கொடுக்கப்படும் ‘Motherland, Fatherland’ என்ற கருத்துரு வாக்கங்களைத் தாண்டி, ‘Holy land’ என்ற கருத்துரு வாக்கத்தை கொண்டுவந்து வைக்கிறார் சாவர்க்கர். அவரது அந்தத் தத்துவத்தின் படி, இஸ்லாமியர்கள், கிறிஸ்துவர்கள் இந்தியர்கள் அல்லர். ஏனென்றால், அவர்களின் புண்ணியபூமி அரேபியாவிலும் பாலஸ்தீனத்திலும் இருக்கிறது என்பது அவரது வாதம்.


இதைத்தான் 1905 தொடங்கி 1966 வரை வெவ்வேறு வார்த்தைகளில் பேசிக் கொண்டிருந்தார் அவர். அதாவது, அவர் மரணத்தைத் தழுவும் வரை அதிலிருந்து மாறவே இல்லை. கடைசிக் காலங்களில், ‘இஸ்லாமிய ஆட்சியாளர்கள் இந்து பெண்களைச் சூறையாடியதைப் போலவே, இந்துக்கள் இஸ்லாமியப் பெண்களைச் சூறையாட வேண்டும்’ என்று சொல்லும் அளவுக்குக்கூட அவர் இறங்கியிருக்கிறார்.

மத அடிப்படைவாதத்தில் அவரது மனம் எந்த அளவுக்கு கெட்டித்தட்டிப் போயிருந்தது என்பதற்கான உதாரணம், அந்த வார்த்தைகள்.

காந்தி ‘Power to people’ என்று சொன்னார் என்றால், சாவர்க்கர் அதிலிருந்து அப்படியே வேறுபட்டு ‘Power over people’ என்று சொன்னார். அதாவது, மக்களின் மீது அரசு மேலாதிக்கம் செலுத்துவதை அப்பட்டமாக ஆதரித்தவர் சாவர்க்கர்.

போதாக்குறைக்கு, இந்தியாவை இந்துக்கள் ஆதிக்கம் செலுத்தும் ஒரு ராணுவ தேசமாக உருவகித்தார் சாவர்க்கர். அதனால்தான் அவருக்கு ஜெர்மனி பிடித்தது.

பின்னாளில், இஸ்ரேலும் அவரது மனதைக் கவர்ந்ததற்குக் காரணம் அதுவே. இந்தியாவை காலனியாதிக்கத்தின் கண்கள் கொண்டு



பார்த்தவர் சாவர்க்கர்’ என்று சில ஆய்வாளர்கள் சொல்வது, அதனாலேயே!

இந்துத்துவத்தை கண்டுபிடித்தவர் சாவர்க்கர் தான்!

விவேகானந்தரும் அரவிந்தரும் திலகரும் ‘இந்துயிஸம் (Hinduism)’ என்று பேசியதை, ‘இந்துத்துவம் (Hindutva)’ என்ற இடத்துக்கு நகர்த்தியவர் சாவர்க்கர். **இந்துயிஸத்தை, இந்து மதத்தைப் பின்பற்றுவது, அதைப் பற்றி பேசுவது, அதன் தத்துவங்களை பரப்புவது என்று வரையறுக்கலாம்.**

**ஆனால், இந்துத்துவம் அப்படியல்ல. அது, இந்துக்களை ஒருங்கிணைப்பது, ஒருங்கிணைத்து ஓர் இந்து சமுதாயத்தைக் கட்டமைப்பது! அதாவது, இந்துயிஸம் இந்துக்களை ஒரு மதமாகப் பார்த்தால், இந்துத்துவா ஓர் இனமாகப் பார்க்கும்.** அந்த இனத்தின் ஆதிக்கத்துக்குள் அது தேசத்தைக் கொண்டு வரும். அந்தத் தேசத்தில், சிறுபான்மை இனத்தவர்கள் இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கப்

- இந்து மதம் வேறு - இந்துத்துவா வேறு; இந்துத்துவா மதத்தை இனமாக்குகிறது.
- இராணுவ ஆட்சி வழியாக இந்தியாவை ஒற்றை ஆட்சியாக்குவதே சாவர்க்கர் நோக்கம்.
- வர்ணாஸ்ரமத்தை ஆதரித்தவர்.
- தனக்கு கடவுள் நம்பிக்கை இல்லை என்றவர், ஆனால், இந்து கோயில்கள் கட்டுவதை ஆதரித்தார்.

படுவார்கள். அவர்களுக்கென்று எந்த உரிமையும் இருக்காது.

இதை நோக்கியே, அந்த ‘Holy land’ என்ற பதத்தை வெகு சாதுரியமாகப் பயன்படுத்தினார் சாவர்க்கர்.

இந்தியாவை முழுவதுமாக ‘இந்துமயமாக்குவதே’ சாவர்க்கரின் நோக்கம். அதற்காக, படை உருவாக்குவது, அந்தப் படையை மக்கள் மேல் செலுத்தி அவர்களை ஆளும் அதிகாரத்தை அடைவது, அந்த அதிகாரத்தின் வழியே, நாடு முழுவதும் ஒற்றைத்தன்மையைக் கொண்டு வருவது என்று, தெளிவாக வரைபடம் வரைகிறார் சாவர்க்கர்.

‘Hinduise all politics, Militarize Hinduism’ என்ற பதத்தை அவர் அடிக்கடி பயன்படுத்துகிறார். இந்த ஒருங்கிணைத்தலை செய்ய அவருக்கு ஒரு எதிர்த் தரப்பு தேவைப்பட்டது. அதனால்தான், இந்து அல்லாதவர்களை, அதாவது இஸ்லாமியர்களை, கிறிஸ்துவர்களை ‘Others’ என்று அழைத்து,

‘Self’ எனப்படும் இந்துக்களின் எதிரிகளாகக் கட்டமைக்கிறார் அவர். ஜைனர்கள், சீக்கியர்கள், பௌத்தர்களைக்கூட அவர் ஓரமாகவே நிறுத்துகிறார். அதுவும், அன்பையும் சமத்துவத்தையும் போதித்த பௌத்தத்தை, இஸ்லாம் கிறிஸ்துவத்துக்கு இணையாக வெறுக்கிறார்.

அவருடைய, ‘Hindutva : Who is a Hindu’ புத்தகம், ஏறக்குறைய ஹிட்லரின் ‘Mein kampf’ புத்தகத்துக்கு இணையானது!

சாவர்க்கரின் இந்து ராஜ்ஜியத்தின் இன்னொரு ஆபத்து, அது இந்து சமுதாயத்தையே பிளவுபடுத்திப் பார்க்கிறது என்பது. இதற்கு, சாவர்க்கர் அவ்வளவு பெரிய சனாதனவாதியும் அல்ல. கடவுள் நம்பிக்கையும் கூட அவருக்கு குறைவுதான்.

Agnostic வகையைச் சேர்ந்தவர். அவரின் மனைவியும் மகனும் இறந்தபோதுகூட, அவர் மதச் சடங்குகள் ஏதும் செய்யவில்லை. ஆனால், சாவர்க்கர் கோயில்கள் கட்ட குரல் கொடுத்திருக்கிறார். 1939-ல் டெல்லியில் சிவன் கோயில் ஒன்று இடிக்கப்பட்ட போது, அதை எதிர்த்தவர்களுள் சாவர்க்கர் முக்கியமானவர்.

அதில் கிடைத்த வெற்றியைப் பெருமளவில் கொண்டாடியவர் சாவர்க்கர். ‘இது போன்ற நடவடிக்கைகளே இந்து மக்களை ஒருங்கிணைக்கும்’ என்று அருகிலிருப்பவர்களிடம் சொல்லி மகிழ்கிறார்.

கடவுளையே வணங்காதவர், கோயில் கட்டுமானங்களை ஏன் ஆதரித்தார் என்பதை முக்கியமாகப் பார்க்க வேண்டும். காரணம் அதுவேதான். அது, அவருக்கு ஓர் அரசியல் ஆயுதம்!

இந்துத்துவத்தின் தந்திரமே அதுதான். அதற்கு, மதம் என்பது மக்களை அடக்கியாளும் ஓர் அரசியல் கருவி மட்டுமே. அதைக் கடந்து யோசிப்பதற்கு இந்துத்துவத்தில் எந்த இடத்தையும் ஏற்படுத்தி வைக்கவில்லை சாவர்க்கர்.

சாவர்க்கரின் இந்து சமுதாயமும் எப்படிப்பட்டது தெரியுமா? உயர்சாதி இந்துக்கள் ஆதிக்கம் செலுத்துவதாகவே அது இருக்கும். ஏனென்றால், இந்து சமுதாயத்தின் அடித்தளமாக ‘வர்ணப் பாகுபாடு’ இருக்க வேண்டும் என்று தெளிவாகச் சொல் கிறார் சாவர்க்கர்.

அந்த இந்து சமுதாயத்தின் முக்கிய மொழிகளும்கூட இந்தியும் சம்ஸ்கிருதமும்தான். கடவுளர்களும்கூட கிருஷ்ணனும் ராமனுமே. ‘பழங்குடி மக்கள் தங்களின் குலதெய்வத்தை துறந்துவிட்டு, ராம வழிபாட்டுக்கு மாற வேண்டும்’ என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறார்

சாவர்க்கர். ‘வறண்டு கிடந்த இந்து மதத்தை, சாதிதான் செழிப்பாக்கியது’ என்று சொல்லுபவராகவும் இருந்தார் அவர்.

அவரது தீண்டாமை ஒழிப்பு முழக்கங்கள் எல்லாமே, வெறும் பாவ்லா மட்டுமே. ஆங்கிலத்தில் ‘Escapism’ என்று அதைச் சொல்வார்கள். வெற்று, தப்பித்தல்வாதம்! இது போதாதென்று, கறுப்பு நிறத்தவர்களை இந்துக்களாக ஏற்றுக் கொள்வதிலும் அவருக்கு தயக்கம் இருந்தது.

இந்து பெண்களைப் பற்றியும் எங்கும் பெரிதாகப் பேசுவதில்லை சாவர்க்கர். ‘அவர்களின் கடமை அடுப்பங்கறை, குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளுதல் மட்டுமே’ என்பது சாவர்க்கர் கொண்டிருந்த எண்ணம்.

இத்தகையவரைத்தான், தனது அணிகலனாக இந்தியத் தாய் சூட வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

இவற்றையெல்லாம் விலக்கிவிட்டுப் பார்த்தாலும், அவரை அங்கீகரிப்பதற்கு மூன்று இடையூறுகள் இருக்கின்றன. முதலாவது, அடிமைப்படுத்திய ஆங்கிலேயனிடமே ‘நான் உங்கள் சேவகன்’ என்று அவர் மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்தார்.

இரண்டாவது, ‘இங்கே இரண்டு தேசங்கள் இருக்கின்றன’ என்று ஜின்னாவுக்கு பாயின்ட் எடுத்துக் கொடுத்ததும்கூட அவரேதான்.

மூன்றாவதுதான் மிக முக்கியமானது. அதாவது, தேசப்பிதா காந்தி கொலைக்குத் தூண்டுதலாக இருந்ததாக அவர் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

1911-ம் ஆண்டு ஜூன் மாதம், அந்தமான் செல்லுலார் சிறையை வந்தடைகிறார் சாவர்க்கர். நாசிக் மாவட்ட நீதிபதி ஜாக்சன் கொலைக்கு, அவர் தூண்டுதலாக இருந்தார் என்பது வழக்கு. அப்போது, ‘ஆபத்தான கைதி’ என்று அவருக்கு அடையாளம் இடப்பட்டது உண்மைதான். ‘D’ என்பது அந்த கோட்வேர்ட். ஆனால், சாவர்க்கர் ஒன்றும் அவ்வளவு ஆபத்தானவராக ஆங்கிலேயருக்கு இருக்கவில்லை என்பதுதான் முரண்பாடு.

(தொடரும்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# கரூரில் ஜாதி ஆணவப் படுகொலை: மதுரை கழகம் கண்டன ஆர்ப்பாட்டம்




கரூரில் ஜாதி ஆணவ படுகொலை செய்யப்பட்ட மருத்துவர் சமூக இளைஞர் ஹரிஹரனுக்கு நீதி கேட்டு மதுரை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில், மாவட்ட செயலாளர் மா.பா.மணிஅமுதன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் 12.1.2021 அன்று மதுரையில் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு மருத்துவர் நலச் சங்கத்தின் மாவட்டத் தலைவர் முருகேசன், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாநில துணைப் பொதுச் செயலாளர் கனியமுதன், அதிமமுக பொதுச் செயலாளர். பசும்பொன் பாண்டியன், தமிழ் தேச மக்கள் முன்னணி மாவட்ட செயலாளர் ஆரோக்கிய மேரி, தமிழக வாழ்வுரிமை பாதுகாப்பு மக்கள் கட்சி தலைவர் மணி பாபா, ஆதித்தமிழர் பேரவை துணைப் பொதுச் செயலாளர் கார்த்தி, அகில இந்திய மஜ்லீஸ் கட்சியின் மாநில கொள்கைப் பரப்புச் செயலாளர் அவுதா காதர் பாட்சா, தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றக் கழகப் பேச்சாளர் அப்பாஸ், தமிழக வாழ்வுரிமைக் கட்சி மாவட்டச் செயலாளர் ராஜீவ், குறிஞ்சியர் மக்கள் ஜனநாயக இயக்க நிறுவனர் விடுதலை நேயன், மக்கள் சட்ட உரிமை இயக்கம் அண்ணாத்துரை, தந்தை பெரியார் திராவிடர் கழக மாநில செயற்குழு உறுப்பினர் தமிழ் பித்தன், எஸ்டிபிஐ உள்ளிட்ட தோழமை அமைப்பு தோழர்கள் பங்கேற்று கண்டன உரையாற்றினர். மேலும் இந்த ஆர்ப்பாட்டத்தில் மருத்துவர் சமூக மக்கள் தாமாக முன் வந்து பங்கேற்றார்கள்.

## பெரியார் சாக்ரடீஸ் தந்தையார் நினைவேந்தல் நிகழ்வு



விழுப்புரம் மாவட்ட கழகச் செயலாளர் பெரியார் சாக்ரடீஸ் தந்தை கோவிந்தசாமி கடந்த டிசம்பர் 30 ஆம் தேதி முடிவெய்தினார். கோவிந்தசாமி நினைவேந்தல் நிகழ்வு 09.01.2021 சனிக்கிழமை மாலை 6 மணியளவில், மேல்மலையனூர், அத்தியந்தல் அண்ணா நகர், கு.பச்சையம்மாள் பெரியசாமி திடலில் நடைபெற்றது. நிகழ்விற்கு கழகத்தின் பொருளாளர் திருப்பூர் துரைசாமி தலைமை வகித்தார். பெரியார் சாக்ரடீஸ் வரவேற்பு கூறினார்.

கழகத்தின் அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, கோவிந்தசாமியின் படத்தை திறந்து வைத்து உரையாற்றினார். ஏ.கே.மணி - மதிமுக மாநில துணை செயலாளர், பா.செந்தமிழ்ச்செல்வன் - திமுக, வெற்றிச்செல்வன் - விசிக மண்டல செயலாளர், சி.செல்வராஜி - இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, காத்தவராயன் - பகுத்தறிவு பாடகர் நெல்லிக்குப்பம், புதுவை கோகுல் காந்தி - தமிழக வாழ்வுரிமை கட்சி, பகுத்தறிவு விஜி - தமிழர் மாமன்றம், மருத்துவர் தன்மானம் ஆகியோர் கோவிந்தசாமியின் நினைவுகளை பகிர்ந்து கொண்டனர். பரிமளா சாக்ரடீஸ் நன்றி கூறினார்.

நிகழ்வில், கழகத்தின் தலைமைக் குழு உறுப்பினர்கள், அய்யனார், சூலூர் பன்னீர் செல்வம், தமிழ் பேரரசு கட்சி பழ.கார்த்திபன், மக்கள் ஜனநாயக கட்சி - முகிலன், பழங்குடி இருளர் பாதுகாப்பு சங்கம் - ஆல்பர்ட் வேளாங்கன்னி, போளூர் வள்ளலார் மன்றம் - தமிழன்பு, திராவிடர் விடுதலைக் கழகம் விழிப்புரம் மாவட்டத் தலைவர் அ.இளையரசன், மாவட்ட துணை செயலாளர் மு.நாகராஜ், செஞ்சி உழவர் கூட்டமைப்பு தலைவர் வையவன் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்வில், புரட்சிப் பெரியார் முழக்கம் 20 சந்தா தொகையான ரூ. 4000/- வழங்கப்பட்டது.

முதல் பக்கத் தொடர்ச்சி

14.01.2021 அன்று காலை 8:30 மணியளவில் மந்தைவெளி பெரியார் படிப்பகம் அருகில் தொடங்கி நடைபெற்றது. நிகழ்வு பறையிசையுடன் தொடங்கியது. திராவிடர் விடுதலைக் கழகம் தலைமை நிலையைச் செயலாளர் தபசி குமரன், சென்னை மாவட்ட தலைவர் வேழவேந்தன், சென்னை மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி மற்றும் திமுக சென்னை தென்மேற்கு மாவட்ட பொறுப்பாளர் த.வேலு, திமுக மயிலை பகுதி வட்டச் செயலாளர் மூ.இராஜேந்திரன், விடுதலை சிறுத்தை கட்சி கண்ணன் ஆகியோரும் கலந்து கொண்டனர். முன்னதாக, 10.01.2021 அன்று விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு பொங்கல் நிகழ்வன்று பரிசுகளும் வழங்கப்பட்டன. நிகழ்வை மயிலை பகுதி தோழர்கள் ஒருங்கிணைத்தனர்.

**மேட்டூர் :** தை-1 தமிழர் திருநாளில் 14.01.2021 வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் மேட்டூர் நகர திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக பொங்கல் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சியின் முதல் நிகழ்வாக பறை முழக்கத்துடன் விழா தொடங்கியது. அதன் பிறகு பொது மக்களுக்கு பொங்கல் வழங்கப்பட்டது.

மேட்டூர் பெரியார் படிப்பகம் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு இருந்தது. படிப்பகத்தின் முகப்பில் பொங்கல் விழா வரவேற்பு பதாகைகள் வைக்கப்பட்டிருந்தது. 500 க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு பொங்கல் வழங்கப்பட்டது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மேட்டூர் நகர செயலாளர் - பிரதாப், நகர தலைவர் அம்ஜத் கான், பொருளாளர் - காளியப்பன் மற்றும் சந்தானபாரதி, விஜய், பிரமோத், கோகுல், மா.பிரபாகரன், நா.பிரபாகரன் ஸ்ரீகாந்த், மு. திவாகர் ஆகியோர் விழாவிற்கான ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர். நிகழ்ச்சியில் மாவட்ட தலைவர் சூரியகுமார், மாவட்ட செயலாளர் கோவிந்தராஜ் ஆகியோரும் கலந்து கொண்டனர். படிப்பகத்தின் அருகாமையில் யாழிசை நண்பர்கள் குழு சார்பாக ஏற்பாடு செய்யப்பட்ட பொங்கல் விழா நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் சி.கோவிந்தராசு, திராவிடர் முன்னேற்ற கழகத்தின் மகளிர் அணி பொறுப்பாளர் தீபா மற்றும் திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



# சைதை அன்பரசு இல்ல மணவிழா



தி.மு.க. பொதுக் குழு உறுப்பினரும் பெரியாரியலாளருமான சைதை மா. அன்பரசன்-காந்திமதி மகள் வின்னி எனும் அறிவு மதி-தமிழன்பன் இணையேற்பு விழா ஜன.10, 2021 மாலை 6 மணியளவில் சைதை புனித தோமையர் மண்டபத்தில் தி.மு.க. சட்ட மன்ற உறுப்பினர் மா. சுப்ரமணியன் தலைமையில் நடந்தது. திராவிடர் கழகப் பரப்புரைச் செயலாளர் வழக்கறிஞர் அருள்மொழி, மண விழாவை நடத்தி வைக்க, கழகத் தலைவர் கொளத்தூர் மணி வாழ்த்துரை வழங்கினார். நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்க பாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் வாகை சந்திரசேகர், கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் உள்ளிட்ட பலரும் வாழ்த்துரை வழங்கினர். நிகழ்வுக்கு ஏராளமான தி.மு.க., தி.வி.க., பெ.தி.க. தோழர்கள் வந்திருந்தனர். புத்தர் கலைக் குழுவினர் பறையிசை, ஆலிவர் வயலின் இசை நிகழ்வுகள் இடம் பெற்றன.

## பெரியார் அண்ணா சிலைகளின் கூண்டை அகற்ற திருப்பூர் கழகம் அரசுக்கு தொடர் அழுத்தம்

திருப்பூரில் தற்போது பெரியார், அண்ணா சிலைகளை அதிமுக அரசு கூண்டமைத்து மறைத்துள்ளது. பெரியாரும் அண்ணாவும் முதன் முதலாக சந்தித்துக் கொண்ட வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வு திருப்பூரில் நடந்தது என்பதனை நினைவூட்டும் வகையில் பெரியாரும் அண்ணாவும் ஒன்றாக இருக்கும்படியாக அமைக்கப்பட்டிருக்கும் இந்த சிலைகளை அதிமுக எடப்பாடி அரசு கூண்டு போட்டு மறைத்துள்ளது.

எனவேதான் கூண்டு அமைக்கும் பணிகள் ஆரம்பித்த பொழுதே திராவிடர் விடுதலைக் கழகம் தன்னுடைய கடுமையான கண்டனத்தைப் பதிவு செய்தது. காவல் துறை, வருவாய் துறையிடம் தங்களுடைய கண்டனத்தையும், கூண்டு அமைக்கும் பணியை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டது. ஆனால் கழகத்தின் கோரிக்கையும் பொது மக்களின் எதிர்ப்பையும் மீறி பெரியார், அண்ணா சிலைகளைப் பார்க்க முடியாமல் மறைத்து தமிழக அரசு கூண்டை முழுமையாக அமைத்துவிட்டது.

இதனைத் தொடர்ந்து திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் கழகப் பொருளாளர் துரைசாமி, கழக மாவட்டத் தலைவர் முகில் ராசு ஆகியோர் தலைமையில் தோழர்கள் முத்து, மாதவன், அய்யப்பன், மாரிமுத்து, மோகன் ஆகியோர் 16.01.2021 அன்று வடக்கு காவல் நிலைய ஆய்வாளரிடம் அமைக்கப்பட்ட கூண்டினை அகற்றக் கோரி மனு அளிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து கூண்டை அகற்றுவதற்கான நடவடிக்கைகள் எதுவும் நடைபெறாத நிலையில் 18.01.2020 அன்று மாவட்ட ஆட்சியரிடம் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் பொருளாளர் துரைசாமி தலைமையில் மாவட்ட தலைவர் முகில்ராசு, தோழர்கள் ராமசாமி, சரஸ்வதி, நீதிராசன், பாண்டியநாதன், தனபால், முத்து, மாதவன், மோகன், ஈழமாறன், திராவிடர் கழகத் தோழர் கருணாகரன் ஆகியோர் புகார் மனு அளித்துள்ளனர்.

தொடர்ந்து இந்தக் கூண்டை அகற்றாமல் கழகத்தின் கோரிக்கையையும் பொது மக்களின் கோரிக்கையையும் இந்த அரசு தொடர்ந்து புறக்கணித்து வருமேயானால் கூண்டை அகற்றுவது பற்றி தோழமை அமைப்புகளுடன் கலந்தாலோசனை செய்து அடுத்தக் கட்ட போராட்டத்தை முன்னெடுப்பது குறித்து திராவிடர் விடுதலைக் கழகம் தீவிரமாக பரிசீலிக்கும் என்று திருப்பூர் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

### நன்கொடை

சேலம் மேற்கு மாவட்டம் சார்பாக 'புரட்சிப் பெரியார் முழக்க'த்திற்கு நன்கொடை ரூ.10,000 வழங்கப்பட்டது.

சென்னை திருவல்லிக்கேணி பகுதி பொங்கல் நிகழ்வில் 'புரட்சிப் பெரியார் முழக்க'த் திற்கு நன்கொடையாக ரூ.5000 முதல் தவணையாக வழங்கப்பட்டது.

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

போவது இல்லை என தெளிவாக தெரிவித்துள்ளனர். நியாயம் கிடைக்க வாய்ப்பில்லாத ஒரு குழுவை போட்டுவிட்டு வீடு திரும்புங்கள் எனச் சொன்னால் எப்படி விவசாயிகள் ஏற்றுக்கொள்ள இயலும்?100க்கும் அதிகமானவர்கள் உயிர்தியாகம் புரிந்துள்ளனரே! அதனை விழலுக்கு இறைத்த நீராக ஆக்க இயலுமா?

மேலும், விவசாயிகளின் போராட்டத்துக்கு தெற்கே ஆதரவு இல்லை என அட்டர்னி ஜெனரல் நீதிமன்றத்தில் கூறினார். இதைவிட பொய் ஏதாவது இருக்க இயலுமா? மகாராஷ்டிராவிலிருந்து ஆயிரக்கணக்கான விவசாயிகள் போராட்டக்களத்துக்கு வந்துள்ளனர். கேரளாவில் தினமும்போராட்டம் நடக்கிறது. தீப்பந்த ஊர்வலங்கள் நடந்தன. கேரளா சட்ட மன்றம் இந்த சட்டங்களை எதிர்த்து தீர்மானம்இயற்றியுள்ளது. நூற்றுக்கணக்கான கேரளா விவசாயிகள் போராட்டக்களத்துக்கு விரைந்துள்ளனர். கர்நாடகா/ஆந்திரா/தெலுங்கானா மாநிலங்களிலும் பெரிய போராட்டங்கள் நடந்துள்ளன. தமிழகத்தில் தொடர்போராட்டம் மாநிலத்தையே உலுக்கியது. தஞ்சை தரணியில் பிரம்மாண்டப் பொதுக்கூட்டம் நடந்துள்ளது. பெருமாள் எனும் உழைப்பாளி இந்த பிரச்சனையில் தனது உயிரை மாய்த்து கொண்டுள்ளார். இவ்வளவுக்குப் பிறகும் தெற்கே இந்த சட்டங்களுக்கு எதிர்ப்பு இல்லை என கூறுவதற்கு அட்டர்னி ஜெனரலுக்கு ஒன்று இதயம் கல்லாக இருக்க வேண்டும்; அல்லது சங்பரிவாரத்தின் பொய்க் குணங்கள் அவருக்கும் தொற்றியிருக்க வேண்டும்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 22nd January 2021

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN